*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(1) 2022*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received:14th March 2022/Accepted: 2nd July 2022*

# சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்களிப்பு: சம்மாந்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

# (Role of Masjids in Community Reconstruction: A Study based on Sammanthurai Region)

Aaqil AMM.[1], Nathira Jahan S[2], Sabeeha AMF[3].
[1] Temporary Assistant Lecturer, Department of Arabic Language.
South Eastern University of Sri Lanka.
[2, 3] BA (Hons), South Eastern University of Sri Lanka.
mohammedaaqil1995@ gmail.com

## Abstract

*Masjids are considered to be the most adorable place of Allah on earth. They are not created for mere worship in the Islamic point of view. Rather than the main purpose is to establish ideal and spiritual society in the world. This study is based on the question of why the Masjids located in Sammanthurai do not contribute enough to the social reconstruction. The main objective of this research is to highlight whether the performance of the Masjids adequately covered on all aspects of the Muslim community, with the satisfaction of the people, and to find out the reasons why the performance of the Masjids in the area of study is not sufficient and providing some precious outline and suggestions. This research uses descriptive analytical method. In order to get the perception of the people on this issue. The data of this research collected through the field and library. As for the primary data researchers prepared a structured questionnaire and selected them from the six mosques in the study area and distributed them to the mahalla residents of each masjid on the basis of 10 questionnaires and obtained the data. And the library method consists of books, research, articles and web articles. In order to obtain accurate scientific results, the qualitative and quantitative methods are used in deducing the questionnaires using MS Excel. The major findings of this study show that although most people in a particular area are satisfied with their work, they are still dissatisfied with certain tasks. The reasons behind this are uneven administration, lack of Professional members in administrative board and lower people's interest with Masjids. At the end of this study, the researcher concluded by proposing suggestions like embracing Professional members in administrative board of the Masjid, bringing all the organization under the area Masjids. conducting awareness program through Masjid In order to facilitate youths in spiritual and worldliness manner.*

***Keywords:*** *Masjid, Community, Role, Reconstruction, Muslims*

## 1. அறிமுகம்

இந்த பூமியில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதும் சொந்தமானதுமான இடம் பள்ளிவாசலாகும் (யூஸுப், 2014) எனவே அல்லாஹ் தன்னை வணங்குவதற்காக தன்னுடைய வார்த்தைகள் மற்றும் கட்டளைகளை செயற்படுத்துவதற்காக தனது மார்க்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தான் விரும்புகின்ற சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக சொந்தமாக்கிக் கொண்ட ஒரே இடம் இப்பள்ளிவாசல்கள் மாத்திரமே.

இதனாலே நபி(ஸல்) அவர்களின் காலத்தில் காணப்பட்ட மஸ்ஜிதுன் நபவி வெறுமென ஆன்மீக செயற்பாடுகளுக்கான இடமாக மட்டுமன்றி உலகியல் செயற்பாட்டுக்கான மையமாகவும்

காணப்பட்டது. அது கல்விப் பீடமாக, ஆலோசனை மன்டபமாக, நிதி நிறுவனமாக, நீதிமன்றமாக, மருத்துவமனையாக, இராணுவமுகாமாக தொழிற்பட்டது.

இதனால் பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மஸ்ஜித்களின் மேற்குறிப்பிட்ட பணிகள் தீர்வாக அமைந்ததை வரலாற்றூடாக கண்டுகொள்ளமுடிகிறது. எனினும் எப்பொழுது மஸ்ஜித்களின் பணி வெறும் வணக்கவழிபாடுகளுக்குள் மாத்திரம் நின்று, முஸ்லிம்கள் தமது அனைத்து நடைமுறைகளையும் மஸ்ஜிதை விட்டு தூரமாகின்றார்களோ அன்றே வாழ்வின் அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியை சந்தித்தனர்.

அந்தவகையில், ஆய்வுக்குட்பட்ட சம்மாந்துறை பிரதேசம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையான முஸ்லிம்களை கொண்ட ஊராகும்.

இப்பிரதேசம் கல்வி, அரசியல், பொருளாதாரம் மற்றும் மார்க்க விழுமியங்களில் தன்னிறைவு கொண்டது. இங்கு 8 ஜும்ஆ பள்ளிவாசல்கள் உள்ளடங்களாக சுமார் 51 பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக அத்துனை பள்ளிவாசல்களும் தாய்பள்ளிவாசலான பெரிய பள்ளிவாசலின் கீழ் இயங்குவதுடன் இவையனைத்தையும் நம்பிக்கையாளர் சபையே இயக்கிவருவதனை அவதானிக்கமுடிகிறது.

இவ்வாறு ஊரில் உள்ள அனைத்துப்பள்ளிவாசல்களும் ஓர் நிர்வாகத்திற்கு கீழ் நின்று வணக்கவழிபாடுகள் தான்டி ஏனைய விடையங்களிலும் இப்பள்ளிவாசல்கள் செயற்பட்ட போதிலும் அவற்றின் பணிகளை விரிவுபடுத்தப்படவேண்டியுள்ளது. அந்தவகையில் குறிப்பிட்ட பிரதேசத்தில் எழுமாறாக 6 பள்ளிவாசல்கள் தெரிவுசெய்யப்பட்டு அம்மஸ்ஜித்களின் பணி சகல துறைகளையும் மையப்படுத்தியதாக போதிய அளவில் இடம் பெறுகின்றனவா என்பதனை குறித்த ஆய்வுப்பிரதேச மக்களின் திருப்தி நிலை ஊடாக கண்டறிந்து விளக்குவதனை முதன்மை நோக்கமாகவும் அவற்றின் பணி போதியதாக இல்லாவிட்டால் அதற்கான காரணங்களை கண்டறிதல், குறிப்பிட்ட பிரதேச மக்களின் அன்றாட வாழ்வியல் சார் நடைமுறைகளை மஸ்ஜித்கள் ஊடாக மேம்படுத்துவதற்கான ஆலேசனைகளை முன்வைத்தல் போன்றவற்றை துனைநோக்கங்களாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சமூகப்புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்களிப்பு குறைவு

## 3. ஆய்வின் நோக்கம்

i. ஆய்வுப்பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜித்கள் சமூகப் புனரமைப்பிற்கு போதிய பங்களிப்பை மேற்கொள்கின்றதா என்பதனை பிரதேச மக்களினூடாக கண்டறிதல்.
ii. குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் மக்களின் லௌகீக வாழ்விலும் முன்னேற்றத்திற்கு மஸ்ஜித்களின் பங்களிப்புக்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

## 4. ஆய்வு முறையியல்

ஆய்வொன்றை மேற்கொள்ளும் போது ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இந்த வகையில் ''சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்களிப்பு'' எனும் தலைப்பிலான இவ்வாய்வானது அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாய்விற்கான தரவு சேகரிக்குமுகமாக இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு அறிக்கைகள், இணையதளங்கள், கட்டுரைகள் என்பவற்றினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. அதேவேளை, முதலாம் நிலைத் தரவுகள் வினாக் கொத்து, நேர்கானலினூடாக பெறப்பட்டன. சம்மாந்துறைப் பிரதேசத்தில் உள்ள மஸ்ஜித்கள் சமூக புனரைமப்பிற்கு போதிய பங்களிப்புக்கள் வழங்குகின்றனவா என்பதனை

அறிந்துகொள்ளுமுகமாக ஆய்வாளர்கள் கட்டமைக்கப்பட்டவினாக்கொத்து தயாரித்து அவற்றை ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள ஆறு மஸ்ஜித்கள் எழுமாறாக தெரிவுசெய்து ஒவ்வொரு மஸ்ஜித்களின் மஹல்லாவாசிகளுக்கும் 10 வினாக்கொத்துக்கள் என்ற அடிப்படையில் வழங்கி தரவுகளை பெற்றுக்கொண்டனர். ஆத்துடன் மஸ்ஜித் தலைவர்கள், கல்விமான்கள், நிர்வாகிகள் மஹல்லாவாசிகளிடம் நேர்காணல் மேற்கொண்டும் தகவல்கள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தரவுகள் MS-Excel மென்பொருளுடாக பகுப்பாய்வு செய்யப்ட்டன.

## 5. இலக்கிய மீளாய்வு

முபாரக் M.M (2014) என்பவரால் எழுதப்பட்ட ‘மஸ்ஜில் பேணப்பட வேண்டிய சட்டங்கள்’ எனும் நூலிலும், இம்தியாஸ் யூஸுப் M.S.M (2014) என்பவரால் எழுதப்பட்ட ‘சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்கு’ எனும் நூலிலும், A.B.M அலியார் (2015) என்பவரால் எழுதப்பட்ட ‘ சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்கு’ எனும் தலைப்பில் கீழ் எழுதப்பட்ட கட்டுரையொன்றிலும் இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்கள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. நௌஸாத், ஏ.எஸ்.எம். என்பவர் “ ஊரை இஸ்லாமிய மயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு” எனும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் இலங்கையில் அமைந்திருக்கின்ற மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பொருளாதார, சமூக, கல்வி, அரசியல், ஒழுக்கம், சுகாதாரம் என பல்துறைசார் விடயங்களில் ஆற்றவேண்டிய பங்களிப்பு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது

நைரூஸ் M.H.M, இஸ்மியா பேகம் M.S, சப்னாஸ் I என்பவர்களால் எழுதப்பட்ட சமூகப்புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு மற்றும் S.M.M மஸாஹிர் என்பவரால் எழுதப்பட்ட ‘இலங்கை மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்கு கல்வியூட்டல்’ என்ற ஆய்வுகளினூடாக ஆய்வுமுறையியல் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன.


## 6. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்வாய்விற்காக மஸ்ஜித்கள் சமூக புனரமைப்பிற்காக எவ்வாறான பங்களிப்புகளை செய்யவேண்டும் என்ற விடயங்கள் ஆய்வாளர்களால் மதிப்பிடப்பட்டு அவை வினாக்கொத்துக்களாக வழங்கபட்டன. குறிப்பாக மஸ்ஜித்களின் பங்களிப்பாக மார்க்க கல்வியை வழங்குதல், வறுமை ஒழித்தல், குடும்ப விரிசல்களை தடுத்தல், போதை பாவனையை தடுத்தல், சுகாதார ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்தல், சமூக ஒற்றுமையை ஏற்படுத்தல், காலத்திற்கேற்ப குத்பாக்களை அமைத்தல், இளைஞர்களை மஸ்ஜிதுடன் தொடர்பு படுத்தல் போன்ற விடயங்கள் பற்றிய பிரதேச மக்களின் திருப்தி நிலைகளை பின்வரும் வரைபடங்கள் தெளிவுபடுத்துகின்றன.

1. மார்க்க கல்வியை வழங்குவதில் மஸ்ஜித்கள் பங்களிப்பு.
   மார்க்க கல்வியை வழங்குவதில் மஸ்ஜித்கள் பங்களிப்பு செய்கின்றனவா என வினவியபோது மக்களின் விடை உரு:01 உள்ளவாறு பின்வருமாறு அமைந்தது. இதில் 80% வீதமான மக்களின் கருத்துப்பிரகாரம் மஸ்ஜித்கள் மார்க்க கல்வியை வழங்குவதில் பங்களிப்பு செலுத்திவருகின்றமையை மிகத்திருப்தியுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேவேளை 13% வீதமான மாணவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில் திருப்தி என ஏற்றுக் கொண்டுள்ளனர். 7%வீதமான மாணவர்கள் நடுநிலைவகுத்துள்ளனர். இதன் அடிப்படையில் நோக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான


உரு: 01

மஸ்ஜித்கள் மார்க்க கல்வியை புகட்டுவதில் பங்களிப்பு செய்துள்ளதனை அறியமுடிகின்றது. இந்த கண்டுபிடிப்பை பிரதேச மக்கள் சிலருடன் நடாத்திய நேர்காணல் வலுவூட்டுகின்றது. அதாவது, பொதுவாக இங்கு அனைத்து பள்ளிவாசல்களிலும் குறைந்தது அல்-குர்ஆன் மற்றும் மக்தப் மத்ரஸாக்கள் நடைபெறுவதாகவும் இதற்கு மேலாக பகுதிநேர ஹிப்ள் மற்றும் ஷரீஆ கற்கை நெறிகள் நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை, அடிக்கடி பயான் நிகழ்ச்சிகள் மற்றும் மார்க்க சட்ட வகுப்புக்கள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, ஆய்வுப்பிரதேசத்தில் மஸ்ஜித்கள் மார்க்க கல்வியை வழங்குவதில் பாரியளவு பங்களிப்பு செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது.




2. வறுமை ஒழிப்பிற்கு பங்களிப்பு செய்தல்


மேற்படி ஆய்வுப்பிரதேசத்தில் மஸ்ஜித்கள் வறுமை ஒழிக்க பங்களிப்பு செய்கின்றனவா என மக்களிட்ம் வினவிய போது உரு: 02 இன் பிரகாரம் 34% வீதமானோர் மிகவும் திருப்தியான முறையில் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேவேளை 47% வீதமானோர் திருப்தியடைந்துள்ளனர் 12% வீதமானோர் இடைப்பட்ட நிலையில் உள்ளதுடன். 5% வீதமானோர் ஏற்கமறுத்துள்ளனர். 2% வீதமானோர் உறுதியாக மறுத்துள்ளனர். இது மஸ்ஜித்கள் வறுமையை ஒழிக்க சிறந்த முன்னெடுப்பு எடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, ஆய்வுப்பிரதேசத்தில் அனைத்து மஸ்ஜித்களும் ஸகாத் நிறுவனத்துடன் இணைந்து காணப்படுவதனாலும் அறுவடை காலம் மற்றும் வருடாந்த பூர்த்தியில் மக்கள் உரிய சக்காத் வழங்குவதனாலும் உரிய பிரதேசத்திற்கு பொறுப்பான மஸஜித்கள் அந்த ஸக்காதை மஹல்லாவாசிகளுக்கு பெற்றுக்கொடுப்பதில் கரிசனை செலுத்துகின்றன. அது ஆய்வுப்பிரதேச மஸ்ஜித்கள் சமூக புனரமைப்பில் பங்களிப்பு செய்வதனை எடுத்துக் காட்டுகின்றது.



உரு: 02


3. இன்று அதிகரித்துவரும் குடும்ப விரிசல்கள் (பிரச்சினைகளை) தடுப்பதற்கு மார்க்க போதனைகளை முன்னெடுத்தல்.

உரு: 03 ஐ அவதானிக்கும் பொழுது இன்று அதிகரித்து வரும் குடும்ப விரிசல்கள் தடுப்பதற்கு மஸ்ஜித்தினுடைய பங்களிப்பினை 27% வீதமானோர் மிகத்திருப்தி நிலையை வெளிக்காட்டியுள்ளனர். 23% வீதமானோர் திருப்தி நிலையையும் 27% வீதமானோர் திருப்தியின்மையையும் கொண்டுள்ளனர். இது குடும்ப வாழ்கை பற்றி மார்க்க சொற்பொழிவுகளை நடாத்தினாலும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகளில் நேரடியாக தலையிடாமையை குறிப்பிடுகின்றது.




உரு: 03

4. அதிகரித்து வரும் போதைப் பாவனையை தடுக்க நடவடிக்கை எடுக்கின்றது.




அதிகரித்துவரும் போதை பாவனையை தடுக்க மஸ்ஜித்கள் எவ்வகையான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்பதனை உரு: 04 காண்பிக்கின்றது. இதில் மிகத்திருப்தி நிலையை 18% வீதமானோர் கொண்டுள்ளனர் 41% வீதமானோர் திருப்தியை கொண்டுள்ளனர் 14% வீதமானோர் திருப்தியின்மையையும் 9% வீதமானோர் உடன் படவேயில்லை என்பதனை காட்டுகின்றது. அந்தவகையில் இவ்வரைபின் அடிப்படையில் நோக்கும் போது மஸ்ஜித்கள் போதை பாவனையை தடுக்க குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்குவதன உரு: 04 ]தானிக்க முடிகின்றது.


5. பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருளாதார உதவிகளை செய்தல்




பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருளாதார உதவிகளை வழங்குவதனை 9% வீதமானோர் மிகவும் திருப்தி நிலையை எய்தியுள்ளனர். 33% வீதமானோர் திருப்திநிலையை அடைந்துள்ளனர். எனினும் பெரும்பாலானோர் இதற்கு மாற்றமான நிலைப்பட்டில் உள்ளதனை உரு: 05 ல் அவதானிக்கமுடிகின்றது.

உரு: 05


6. சுகாதார ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மஸ்ஜித்கள் பங்காற்றுதல்




உரு: 06 இன் பிரகாரம் சுகாதார ரீதியிலான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மஸ்ஜிதினுடைய பங்களிப்பை நோக்கும் போது 45% வீதமானோர் மிகவும் திருப்தி நிலையிலும் 18% வீதமானோர் திருப்திநிலையிலும் 14% வீதமானோர் நடுநிலையிலும் உள்ளவேளையில் 14% ஆனோர் ஏற்றுக்கொள்ளாமையிலும் 9% ஆனோர் உறுதியாக மறுத்த நிலையிலும் காணப்படுகின்றனர்.

உரு: 06

7. சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதில் போதிய பங்களிப்பு செய்கின்றது.





சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதில் மஸ்ஜித்தினுடைய பங்களிப்பினை உரு: 07 காண்பிக்கின்றது. அதில் 45% வீதமானோர் உறுதியாக ஏற்றுக்கொண்டுள்ளனர் 18% வீதமானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர் ஏனையோர் ஏற்கமறுத்துள்ளனர்.

உரு: 07

8. இளைஞர்களை மஸ்ஜிதுடன் தொடர்புபடுத்தும் வகையில் மஸ்ஜித் நிர்வாகிகள் மற்றும் இமாம்கள் செயற்படுகின்றனர்.


இன்றைய இளைஞர்களை மஸ்ஜித்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு நிர்வாகிகள், இமாம்களுடைய பங்களிப்பினை 45% வீதமானோர் உறுதியாக ஏற்கின்றனர். 18% வீதமானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர் 14% வீதமானோர் இடைப்பட்ட கருத்தைக் கொண்டுள்ளனர். 23% வீதமானோர் ஏற்க மறுத்துள்ளதை உரு:08 ல் அவதானிக்க முடிகிறது.




உரு: 08

9. காலத்திற்கேற்றவாறு குத்பாக்களையும் பயான்களையும் அமைப்பதனூடாக வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களில் காலத்திற்கேற்ப குத்பாப் பிரசங்ககங்களும், பயான் நிகழ்ச்சிகளும் நடைபெறுவது பற்றி வினவியபோது 73% வீதமானோர் உறுதியாகவும், 27% வீதமானோர் சாதாரணமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் 6% வீதமானோர் நடுநிலையில் உள்ளதுடன் இதற்கு எவரும் மறுப்பு தெரிவிக்கவில்லை. இவ்வரைபடத்தை உரு: 09 அவதானிக்கும் பொழுது ஆய்வுப்பிரதேசத்தில் சிறந்த முறையில் வழிகாட்டல்கள் நடைபெறுவது புலனாகின்றது. அத்துடன் நேர்காணலில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவும் இதற்கு வலுச்சேற்கிறது. அதாவது, ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் 8 ஜூம்ஆ மஸ்ஜித்களும் முச்சபைகளான ஜம்இய்யதுல் உலமா, மஜ்லிஸ் அஷ்ஷுரா மற்றும் நம்பிக்கையாளர் சபைகளின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் நடைபெறுவதுடன் காலத்திற்கேற்றால் போல் முச்சபைகளாலும் வழங்கப்படுகின்ற தலைப்புகளுக்கேற்ப 8 ஜூம்ஆ மஸ்ஜித்களிலும் ஒரே தலைப்பின் கீழ் ஜூம்ஆக்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.




உரு: 09

## 7. முடிவுரை

நம் மீது கடமையான தொழுகை முதலிய வணக்கங்களை நிறைவேற்றுமிடமான மஸ்ஜித்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆரம்ப காலத்தில் மஸ்ஜித்கள் தீன் ஒளி பரப்புமிடமாகவும், ஒற்றுமைக்கு வித்திட்ட தளமாகவும் வந்தவை இன்று பிரதேசத்திற்குள் முடங்கி காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. எனவே அது மீண்டும் ஒளிபெறவேண்டும். இன்று முஸ்லிம்கள் பரந்து விரிந்து வாழ்ந்தாலும் கூட தமது தனித்தன்மையினை வெளிக்காட்டுவதற்கும், நாம் இன்று எதிர்கொள்கின்ற அனைத்து பிரச்சினைகளுக்கான தீர்வினை மஸ்ஜித்கள் ஊடாகவே அடைய முடியும். இதன் அடிப்படையில் சம்மாந்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்ஜித்களின் சமூக புனரமைப்பிற்கான பங்களிப்பினை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் மேலே, கலந்தாலேசிக்கப்பட்ட வரைபுகளை பார்க்கும்பொழுது ஆய்வுப் பிரதேசத்தில் மஸ்ஜித் மூலம் மேற்கொள்ளப்படும் சமூகப் புனரமைப்பு முழுமையான திருப்தியின்மையை அவதானிக்கமுடிகிறது. ஏனெனில், அவை மார்க்க கல்வியை வழங்குதல், பயான் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், வறுமை ஒழிப்பிற்கு உந்து சக்தியாக அமைதல் போன்ற செயற்பாடுகளுக்கு அதிகூடிய பங்களிப்பினை வழங்குகின்ற அதேவேளை போதைப்பொருள் பாவனையை தடுத்தல், இளைஞர்களை மஸ்ஜித்களுடன் தொடர்பு படுத்தல், பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிகளை

செய்தல் என்பவற்றிற்கு குறைந்தளவில் பங்களிப்புசெலுத்துவதனையும் அவதானிக்கமுடிகிறது. மேன்மேலும் இம்மஸ்ஜித்கள் சமூகப்புனரமைப்பில் பங்களிப்பு செய்வதற்கு, மஸ்ஜித் நிர்வாகத்திற்குள் துறைசார்ந்தவர்களை உள்வாங்குதல், பிரதேங்களில் இயங்கிவருகின்ற அனைத்து இயக்கங்களையும் ஒன்று படுத்தி பள்ளிவாலின் கீழ் ஒன்றாக இயங்க வழிவகுத்தல், மஸ்ஜித்களினூடாக விழிப்புனர்வு கருத்தரங்குகளை ஏற்படுத்தல், மஸ்ஜித் இமாம்களுக்கு போதியளவு சம்பளங்களை வழங்குவதனூடாக அவர்களை ஆர்வத்துடன் மஸ்ஜித் பணிகளை முன்னெடுக்க வழியமைத்தல், குடும்ப விரிசல்கள் ஏற்படுவதனை தடுப்பதற்கான குழுக்களை அமைத்து அதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், சமூகபணிகளில் முன்மாதிரியாக உள்ள மஸ்ஜித்களுடன் இணைந்து திறன்பட தமது மஹல்லாவை கட்டியெழுப்பல், இளைஞர்கள் தமது கல்விநடவடிக்கைகளை மேற்கொள்தல், தயார்படுத்தலுக்காக மஸ்ஜித்களில் இடமொதுக்கி கல்வியையும் நற்குணங்களையும் வளர்த்தல், சமூகப் பங்களிப்பு என்ற போர்வையில் சிறு சிறு அமைப்புக்களாக இயங்கிவருகின்ற இளைஞர்களை ஒற்றுமைப்படுத்தி, ஊக்குவித்து நல்ல வழிகாட்டல்களை வழங்கி தற்கால சமூகத்தின் தேவையறிந்து இலக்கு நோக்கிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வழிவகுத்தல் போன்ற ஆலேசனைகள் முன்வைக்கப்பட்டன.

## References


Aliyar, A. (2015). ***சமூகப் புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு.***

Al-Najmi, A. Y. (2017). *The Role of The Masjid in Islam.* U.S.A: Al- Rahmaniyyah Publishing .

Mazahir, S. (2015). **இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்கு கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜித்களை மாதிரியாகக் கொண்ட ஆய்வு.** *KALAM Journal*, 15-24.

Mirzook, S. (2011, December 11). ***சமூகப் புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு***. Retrieved from Thinakaran: http://archives.thinakaran.lk/Vaaramanjari/2011/12/11/?fn=f11121111

Mubarak, M. (2014). ***மஸ்ஜிதில் பேணப்பட வேண்டிய சட்டங்கள.***

Nairoos, M., Begum, M. I., & Safnas, I. (2017). **சமூக புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு: கெகிராவை பிரதேச ஜும்ஆ மஸ்ஜித்களை மையப்படுத்திய ஆய்வு.** *4th International Symposium.. Faculty of Islamic Studies and Arabic Language* (pp. 32-43). oluvil, Sri Lanka: Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

Nawsath, A. (n.d.). ***ஊரை இஸ்லாமியமயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு.*** Colombo: Salamah Publication .

Nusrath Banu. (2018). **இஸ்லாமிய மயமாக்கமும் பொருளாதார நடவடிக்கைகளும்: சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் விசேட ஆய்வு.** *5th International Symposium. Faculty of Islamic Studies and Arabic Language,* (pp. 513-520). oluvil, Sri Lanka: Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

Yousuf, I. (2014). *contribution of Masjith in socity reconstruction* . Islam House .

***சமூக மாற்றத்தில் பள்ளிவாசலின் வகிபங்கு***. (2017, October 19). Retrieved from Tangalle Muslim Welfare Society: https://tmwsinfo.blogspot.com/